# மாகாணக்கல்வித் திணைக்களம்

## வட மாகாணம்

### ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை - 2017

***வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்***

தரம் - 10

நேரம் :- 1.00 மணி

சுட்டெண் :……………………..

புள்ளி :-

பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

❖ **1 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

- **பின்வரும் விடய ஆய்விலிருந்து வினா இலக்கம் 1 இலிருந்து 4 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

வணிகப் பட்டதாரியான காயத்ரி என்பவர் தனது வேலையில்லாப் பிரச்சினையைக் கருத்திற் கொண்டு ‘விரைவு உணவகம்’ ஒன்றினை நடாத்துகின்றார். இவர் உள்ளூரில் உள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்து அவற்றை நுகர்வோருக்கும் அருகில் உள்ள அரச திணைக்களம் ஒன்றிற்கும் விநியோகித்து வருகின்றார்.

1. காயத்ரியின் உணவகத்தினால் நிறைவேற்றப்படும் மனித தேவையாவது
   1) உணவு 2) இடியப்பம் 3) இட்லி 4) வடை
2. இவ் விடய ஆய்வில் இருந்து காயத்ரி உணவகமானது
   1) பொருள் உற்பத்தி வணிகம் ஒன்றாகும்.
   2) சேவை வழங்கும் வணிகம் ஒன்றாகும்.
   3) இலாப நோக்கற்ற வணிகம் ஒன்றாகும்.
   4) பங்குடமை வணிகம் ஒன்றாகும்.
3. காயத்ரி உணவகத்தின் பலம் ஒன்றாக இருப்பது
   1) உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தல்.
   2) காயத்ரி வணிகப்பட்டதாரியாக இருத்தல்.
   3) அரச திணைக்களத்துக்கு அருகில் காணப்படுதல்.
   4) மேற்கூறிய அனைத்தும்.
4. காயத்ரி தனது வணிகத்தைத் தனியாள் உடைமை வணிகமாக ஆரம்பிப்பதற்குக் காரணம் அல்லாதது
   1) இலாபம் முழுவதையும் உரிமையாளர் ஒருவரே அனுபவித்தல்.
   2) இலகுவாக ஆரம்பிக்கக் கூடியதாக இருத்தல்.
   3) குறைந்த மூலதனத்துடன் ஆரம்பித்தல்.
   4) நீடித்த ஆயுளை உடையது.



kalvi.lk

5. வணிகமொன்றின் பலம் மற்றும் வாய்ப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**A - தேவையான மூலதனம்**

**B - அரசினால் குறைந்த வட்டிக்கடன் வழங்கல்**

**C - அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணம்**

**D - ஊழியர்களின் விசேட திறமையும் முயற்சியும்**

இங்கு குறிப்பிட்டவற்றுள் வாய்ப்பு மாத்திரம் உள்ளடக்குவது

1) Aயும் Bயும் 2) Bயும் Cயும் 3) Aயும் Dயும் 4) Bயும் D யும்

6. தேவிபாளிகா வித்தியாலயத்தில் புதிய கட்டிடமொன்று முறையாகத் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டு வருகிறது. இங்கு கடமையாற்றும் தொழிலாளர்களுள் உள உழைப்பை வழங்கும் ஊழியர் யார்.

1) பொறியியலாளர் 3) மேசன்

2) தச்சுத் தொழிலாளி 4) கூலி

7. பூம்புகார் கிராமத்தில் ஆடைத் தொழிற்சாலை ஒன்று தனியாரினால் ஒன்றிணைக்கப்பட்டு சிறப்பாக நடாத்தப்படுகிறது. அந்த அமைப்பில் காணக்கூடிய அகச் சூழல் காரணிகளில் ஒன்று அல்லாதது

1) ஊழியர் 2) முகாமையாளர் 3) வங்கி 4) உரிமையாளர்

8. குடிசன புள்ளி விபரத் திணைக்களத்தின்படி 25க்குக் குறைந்த ஊழியர்களை உள்ளடக்கியது

1) தனியுடமை வியாபாரம் 3) சிற்றளவு வணிகம்

2) பங்குடமை வியாபாரம் 4) சிறிய மற்றும் நடுத்தர வணிகம்

9. வணிகமொன்றின் ...(1)... முதலீட்டின் பாதுகாப்புத் தொடர்பில் அக்கறையுடையவர்களாகக் காணப்படுகின்ற அதே வேளை ...(2)... நியாயமான சம்பளத்தைப் பெற்றுக் கொள்வதில் அக்கறையுடையவர்களாகக் காணப்படுவர். மேலே தரப்பட்ட கூற்றில் (1) மற்றும் (2) ஆகிய இடைவெளிகளில் இடம் பெறக் கூடிய சரியான சொற்களை ஒழுங்கு முறையில் எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1) போட்டியாளர்கள், ஊழியர்கள் 3) உடமையாளர்கள், வழங்குனர்கள்

2) ஊழியர்கள், உடமையாளர்கள் 4) உடமையாளர்கள், ஊழியர்கள்

10. விமல் தனது வியாபாரத்தை 'பைந்தமிழ்' எனப் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கின்றார். இப் பதிவுச் சான்றிதழை வழங்கும் நிறுவனம்.

1) பிரதேச சபை 3) பிரதேச செயலகம்

2) நுகர்வோர் அதிகார சபை 4) கம்பனிப் பதிவாளர் நாயகம்

11. இலங்கையில் கல்விச் சேவையை சிறப்பாக வழிநடத்துவதற்குக் கல்வித் திணைக்களம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ் வணிக அமைப்பானது

1) இலாப நோக்கமுள்ள தனியார் துறை நிறுவனம்

2) இலாப நோக்கமற்ற அரச உடமை நிறுவனம்

3) இலாப நோக்கமுள்ள அரச உடமை நிறுவனம்

4) இலாபநோக்கமற்ற தனியார் துறை நிறுவனம்

12. பனங்காமம் பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றில் இருக்கக்கூடிய ஆகக் குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை யாது.

1) 20 2) 10 3) 50 4) 100



kalvi.lk

13. மதுராங்கன் தனது சிற்றுண்டிச்சாலையை 'அறுசுவையகம்' எனும் தனியுரிமை வணிகமாக 1918 இன் 06 ஆம் இலக்க வணிகப் பெயர்க் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளார். இதன் மூலம் அவரது வணிகம் பெறக் கூடிய பிரதிபலன் யாது

1) வணிகத்தின் இருப்பு உறுதியாதல்
2) வணிகத்திற்கு அடையாளமொன்று கிடைத்தல்
3) சகல இலாபங்களையும் தாமே பெறுதல்
4) வருமான வரியிலிருந்து விலக்குப் பெறுதல்

14. அதிகார சபை, ஆணைக்குழு, சபைகள், பணியகம் போன்ற பெயர்களில் அழைக்கப்படும் வணிக அமைப்பு

1) அரச கம்பனி
2) அரச கூட்டுத்தாபனம்
3) கூட்டுறவு
4) அரச திணைக்களம்

15. தனியார் துறையில் பின்வருவனவற்றுள் எது ஒரு வணிக நிறுவனம் அன்று

1) கம்பனிகள்
2) கூட்டுத்தாபனங்கள்
3) பங்குடமைகள்
4) கூட்டுறவுச் சங்கங்கள்

16. அங்கத்தவர்களினதும் சமூகத்தினதும் நலன்களைக் கருத்திற் கொண்டு செயற்படும் அமைப்பாகக் கருதக் கூடியது

1) காந்தன் களஞ்சியம்
2) இலங்கை போக்குவரத்துச் சபை
3) அறிவொளி சனசமூக நிலையம்
4) சாளினி பல்பொருள் வாணிபம்

17. கணக்கீட்டின் பிரதான நோக்கம்

1) இலாப நட்ட நிலைமை, நிதி நிலைமையினை அறிதல்
2) கொடுக்கல் வாங்கல்களை முதன்மை ஏடுகளில் பதிதல்.
3) பரீட்சை மீதி தயாரித்தல்
4) வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் பிரிவினர் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பயனுள்ள தகவல்களை வழங்கல்.

18. பின்வருவனவற்றுள் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படும் தகவலைத் தெரிவு செய்க.

1) வணிகச் சூழல் பாதுகாப்பானது
2) ஊழியர்கள் வினைத்திறன் மிக்கவர்கள்
3) தை மாத வாடகை செலுத்தியது ரூ 10 000
4) வணிகத்தின் வளர்ச்சிப் போக்கு ஆரோக்கியமாக உள்ளது.

19. பின்வரும் பண்புகளை கருத்திற் கொள்க.

- **கடந்த காலக் கொடுக்கல் வாங்கல்களின் விளைவாகும்.**
- **வணிகத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகும்.**
- **எதிர்காலப் பொருளாதார நலன்களைக் கொண்டு வரும்**

மேற்படி பண்புகளைக் காணக்கூடியது.

1) பொறுப்பில் ஆகும்.
2) வருமானத்தில் ஆகும்.
3) சொத்துக்களில் ஆகும்.
4) செலவீனத்தில் ஆகும்.

20. கணக்கீட்டின் கூறுகளாக அமையாதது

1) சொத்துக்கள்
2) உரிமையாண்மை
3) பொறுப்புக்கள்
4) இலாபங்கள்



kalvi.lk

21. நடைமுறைச் சொத்துக்களைக் கொண்ட தொகுதி

   1) சரக்கிருப்பு, கடன்பட்டோர், இயந்திரங்கள்
   2) சரக்கிருப்பு, கடன்பட்டோர், பெறவேண்டிய வருமானம்
   3) கடன்கொடுத்தோர், கடன்பட்டோர், சரக்கிருப்பு
   4) வங்கிமேலதிகப் பற்று, கடன்பட்டோர், சரக்கிருப்பு

22. வரவு மீதியை கொண்ட தொகுதி

   1) சொத்து, செலவீனம், நட்டம்
   2) சொத்து, வருமானம், நட்டம்
   3) சொத்து, பொறுப்பு, நட்டம்
   4) சொத்து, பொறுப்பு, செலவு

23. குறிப்பிட்ட திகதியில் வணிகமொன்றின் கணக்கீட்டுச் சமன்பாட்டின் பெறுமானங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| • **சொத்துக்கள்** | **=** | **உரிமை** | **+** | **பொறுப்புக்கள்** |
| **ரூ 200 000** | **=** | **ரூ 150 000** | **+** | **ரூ 50 000** |

ரூ 2000 வங்கிக் கடன் வட்டி உள்ளடங்கலாக ரூ 10 000 வங்கித் தவணைக் கட்டணமாகச் செலுத்தியிருப்பின் மேற்குறித்த கணக்கீட்டுச் சமன்பாட்டின் பெறுமானங்களைச் சரியாக காட்டும் விடையைத் தெரிவு செய்க.

| | சொத்துக்கள் | = | உரிமை | + | பொறுப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| 1) | ரூ 210 000 | = | ரூ 152 000 | + | ரூ 58 000 |
| 2) | ரூ 190 000 | = | ரூ 148 000 | + | ரூ 42 000 |
| 3) | ரூ 208 000 | = | ரூ 150 000 | + | ரூ 40 000 |
| 4) | ரூ 190 000 | = | ரூ 140 000 | + | ரூ 48 000 |

24. பின்வரும் விடயங்களில் இருந்து உரிமையில் அதிகரிப்பும் பொறுப்பில் குறைவும் ஏற்படுத்தும் தாக்கத்தைக் காட்டும் கொடுக்கல் வாங்கல் ஒன்றாக இருப்பது.

   1) உரிமையாளர் தனது சொந்த நிதியைப் பயன்படுத்தி வணிகத்தின் சென்மதியாளருக்கு நேரடியாகச் செலுத்தியது ரூ 20 000
   2) உரிமையாளர் தனது தனிப்பட்ட சொந்தத் தேவை கருதி ரூ 10 000 ஐ வணிகத்திலிருந்து பற்றுதல்.
   3) உரிமையாளர் ரூ 20 000 ஐ மேலதிக மூலதனமாக இடல்.
   4) ரூ 500 000 பெறுமதியான இயந்திரத்தினைக் கொள்வனவு செய்தல்.

25. விற்பனை மூலம் ரூ 15 000 பெறுமதியான காசோலையொன்று பெறுதல் தொடர்பான சரியான இரட்டைப் பதிவினைத் தெரிவு செய்க.

   1) வங்கிக் கணக்கு வரவு ரூ 15 000    விற்பனைக் கணக்கு செலவு ரூ 15 000
   2) விற்பனைக் கணக்கு வரவு ரூ 15 000    வங்கிக் கணக்கு செலவு ரூ 15 000
   3) காசுக் கணக்கு வரவு ரூ 15 000    விற்பனைக் கணக்கு செலவு ரூ 15 000
   4) காசுக் கணக்கு வரவு ரூ 15 000    வங்கிக் கணக்கு செலவு 15 000



kalvi.lk

26. கீழே X நிரலில் கணக்குகளின் வகைகளும் Y நிரலில் சில பேரேட்டுக் கணக்குகளும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. சொத்துக்கள் கணக்குகள்<br>2. பொறுப்புக்கள் கணக்குகள்<br>3. வருமானக் கணக்குகள்<br>4. செலவினக் கணக்குகள் | A - சம்பளக் கணக்கு<br>B - விற்பனைகள் கணக்கு<br>C - வருமதியாளர் கணக்கு<br>D - சென்மதியாகவுள்ள மின்சாரச் செலவுகள் கணக்கு |

மேலே தரப்பட்டுள்ள X நிரலிலுள்ள கணக்குகளின் வகைகளுடன் Y நிரலிலுள்ள பேரேட்டுக் கணக்குகள் பொருந்துமாறு சரியான ஒழுங்குமுறையில் காணப்படும் விடை

1) B,C,D,A  2) C,B,A,D  3) C,D,B,A  4) D,C,B,A

27. 'செலவுகள் அதிகரித்தல், வரவு குறைதல்' எனும் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை எடுத்துக் காட்டும் கணக்கு
   1) கொடுத்த கழிவுக் கணக்கு
   2) காசுக் கணக்கு
   3) கொள்வனவுக் கணக்கு
   4) மூலதனக் கணக்கு

28. வணிகம் ஒன்றில் காப்புறுதிக் கட்டணங்கள் ரூ 5000 காசாகச் செலுத்தப்பட்டதனைப் பதிவு செய்வதற்குப் பொருத்தமான மூல ஆவணம் மற்றும் முதன்மை ஏடு என்பவற்றை ஒழுங்கு முறையில் எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.
   1) கொடுப்பனவு உறுதிச்சீட்டு (கொடுப்பனவுக் கைச்சாத்து), சில்லறைக் காசேடு
   2) காசேடு, கொடுப்பனவு உறுதிச்சீட்டு
   3) கொடுப்பனவு உறுதிச்சீட்டு, காசேடு
   4) நாட்குறிப்பு உறுதிச்சீட்டு (நாட்குறிப்புக் கைச்சாத்து), காசேடு

29. பரீட்சை மீதி பற்றிய சரியான விடயம்
   1) இது ஒரு கணக்காகும்.
   2) இது ஒரு பேரேடாகும்.
   3) இது ஒரு பேரேட்டு மீதிகளின் சுருக்கமான கூற்றாகும்.
   4) இது ஒரு இலாபநட்டக் கணக்காகும்.

30. கொள்வனவு மற்றும் விற்பனை நாளேட்டில் சரியாக உள்ளடக்கும் நடவடிக்கை
   1) காசு விற்பனை 4000 மற்றும் பீற்றரிடம் கொள்வனவு 1000
   2) விமலுக்கு விற்பனை 3000 மற்றும் காசுக் கொள்வனவு 4000
   3) முகுந்தனிடம் கொள்வனவு 4000 மற்றும் அஸ்வினுக்கு விற்பனை 3000
   4) காசுக் கொள்வனவு 8000 மற்றும் நிமலுக்கு விற்பனை 4000

31. வணிகமொன்றின் சில்லறைக் காசேடு தொடர்பாக சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.
   - 01.01.2017 இல் சில்லறைக் காசாளரிடம் இருந்த சில்லறைக் காசேட்டு மீதி ரூ 200
   - 01.01.2017 இல் மீள் நிரப்பப்பட்ட சில்லறைக் காசு வசக்கட்டு ரூ 1800
   - 31.01.2017 இல் சில்லறைக் காசாளரிடமிருந்த சில்லறைக் காசேட்டு மீதி ரூ 300



kalvi.lk

வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டுத் தொகையையும் ஜனவரி மாதத்தின் சில்லறைக் காசேட்டுச் செலவினங்களையும் முறையே சரியாக எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1) ரூ 2000, ரூ 1500
2) ரூ 1800, ரூ 1700
3) ரூ 1800, ரூ 1500
4) ரூ 2000, ரூ 1700

32. வங்கிக் கூற்றின் வரவுப்பக்கத்தில் காணப்படும் ஓர் உருப்படி
1) கடன்பட்டோர் பணம் அனுப்புதல்கள்
2) காசு வைப்புகள்
3) காசோலை வைப்புகள்
4) வங்கி அறவீடுகள்

33. கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து வணிகத்திற்குக் கிடைத்த ரூ 15 000 பெறுமதியான காசோலை ஒன்று பெறப்பட்டு இரண்டு நாட்களின் பின் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட போது வங்கியால் மறுக்கப்பட்டது. இக் காசோலை மறுப்பைப் பதிவு செய்வதற்கான மூல ஆவணம் (1) ............ ஆகயிருப்பதுடன் மூல ஏடு (2) .............. ஆகும். மேற்குறித்த (1), (2) ஆகிய இடங்களுக்கான சரியான விடையை ஒழுங்குமுறையில் காட்டுவது
1) பற்றுச்சீட்டு, காசேடு
2) காசோலை மறுப்பு அறிவிப்பு பத்திரம், வங்கிக் கணக்கு
3) காசோலை மறுப்பு அறிவிப்பு பத்திரம், காசுக் கணக்கு
4) காசோலை வைப்புத் துண்டு, வங்கிக் கணக்கு

34. வணிகம் ஒன்றின் 31.03.2017 ஆம் திகதியன்று வணிகத்தின் வங்கி மீதி ரூ 26 500 ஆக இருந்ததுடன் அன்றைய தினத்தில் வங்கிக் கூற்று மீதி ரூ 24 500 ஆகயிருந்தது. இவ் வேறுபாட்டிற்குக் காரணமான கொடுக்கல் வாங்கல்.
1) வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூ 2000
2) வங்கிக்கு நேரடியாகப் பெற்ற முதலீட்டு வருமானம் ரூ 2000
3) வங்கி நேரடியாகப் பெற்ற நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூ 2000
4) வரைந்து வழங்கி கொடுப்பனவுக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ 2000

35. நகுலன் வணிகத்தின் கடன்கொடுத்தோர் ஒருவரான சமந்தாவுக்கு ரூ 20 000 பெறுமதியான கடன்தொகையைச் செலுத்தும் போது 10% கழிவொன்றிற்கு உரித்துடையதாக இருந்தது. இது நகுலன் வணிகத்திற்கு
1) ரூ 2000 கொடுத்த கழிவாகும்.
2) ரூ 2000 பெற்ற கழிவாகும்.
3) ரூ 20 000 கொடுத்த கழிவாகும்.
4) ரூ 20 000 பெற்ற கழிவாகும்.

36. தம்ரோ தளபாடக் கம்பனியிடம் இருந்து ரூ 25 000 பெறுமதியான தளபாடத்தை தினேஷ் வாணிபம் கடனுக்கு அலுவலகப் பயன்பாட்டிற்கு எனக் கொள்வனவு செய்தது. இதனைப் பதிவதற்குப் பொருத்தமான முதன்மை ஏடு
1) விற்பனை நாட்குறிப்பேடு
2) பொது நாட்குறிப்பேடு
3) காசுக் கணக்கு
4) கொள்வனவு நாட்குறிப்பேடு



kalvi.lk

37. 'கரன் பல்பொருள் வணிக முயற்சியின்' 2017 மார்ச் மாத பின்வரும் கொடுக்கல் வாங்கலில் விற்பனை நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் எது

1) பழைய தளபாடம் உடன் காசுக்கு விற்பனை ரூ 25 000
2) பழைய இயந்திரம் 'ஸ்ரீ என்ரபிறைசிற்கு' விற்பனை ரூ 35 000
3) மீள்விற்பனைப் பொருள் உடன் காசிற்கு விற்பனை ரூ 15 000
4) மீள் விற்பனைப் பொருள் கடன்பட்டோரான மைதிலிக்கு விற்பனை ரூ 20 000

38. கீழே தரப்படுவது கணக்கீட்டுத் தவறொன்றைத் திருத்துவதற்குப் பொருத்தமான திருத்த நாட்குறிப்புப் பதிவு ஆகும்.

- **அலுவலக உபகரணக் கணக்கு வரவு ரூ 40 000**
  **அலுவலகச் செலவுகள் கணக்கு செலவு ரூ 40 000**

இவ் வணிகத்தின் கணக்குப் பதிவின் போது நிகழ்ந்த தவறு

1) அலுவலகச் செலவுகள் ரூ 40 000 அலுவலக உபகரணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமை.
2) காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் ரூ 40 000 ஏடுகளிலிருந்து முற்றாக விடப்பட்டுள்ளமை.
3) செலுத்திய அலுவலகச் செலவுகள் ரூ 40 000 முற்றாகப் பதிவு செய்யப்படாமை
4) அலுவலக உபகரணக் கொள்வனவு ரூ 40 000 அலுவலகச் செலவுகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டமை.

39. வணிகமொன்றின் பரீட்சை மீதியின் வரவுப் பக்கக் கூட்டுத் தொகை ரூ 300 000 ஆக இருப்பதுடன் செலவுப் பக்கக் கூட்டுத்தொகை ரூ 295 000 ஆகவிருந்தது. இவ் வேறுபாட்டின் காரணமாக வணிகத்தின் தொங்கல் கணக்கில்

1) ரூ 295 000 வரவு மீதியொன்றைக் காட்டும்.
2) ரூ 300 000 செலவு மீதியைக் காட்டும்
3) ரூ 5000 வரவு மீதியொன்றைக் காட்டும்.
4) ரூ 5000 செலவு மீதியைக் காட்டும்.

40. கீழ்வரும் தரவைப் பயன்படுத்தி விடை அளிக்க.

- காந்தரூபன் வணிகத்தின் 31.12.2016 இல் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

A - மின்சாரக் கணக்கு மீதி ரூ 15 000 பரீட்சை மீதிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை.

B - மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் செலவு ரூ 3000 மோட்டார் வாகனக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

C - கடன்பட்டோர் சுதர்சன் தந்த காசு ரூ 7000 காசுக் கணக்கில் மட்டும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

D - தளபாடம் வாங்கியது ரூ 35 000 ஏடுகளில் முற்றாகப் பதியப்படவில்லை.

தொங்கல் கணக்கை உருவாக்கக்கூடிய வழுக்களை மட்டும் கொண்ட விடை யாது

| | |
|---|---|
| 1) A,B | 3) A,D |
| 2) B,D | 4) A,C |

(1 x 40 = 40 புள்ளிகள்)



kalvi.lk

### பகுதி II

❖ **முதலாம் வினா உட்பட பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II ல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**01. பின்வரும் சம்பவத்தை பயன்படுத்தி 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.**

மன்னார் மாதோட்டம் பகுதியில் வசிக்கும் அழகர் என்பவர் கறவைப் பசுக்களை (பால் தரும்) வளர்த்து வருகின்றார். இவர் சுத்தமான முறையில் பசுக்களில் இருந்து பாலை எடுப்பதுடன் அப்பாலை நகரில் உள்ள சிற்றூண்டிச்சாலைகளுக்கு விநியோகம் செய்து வருகின்றார். அத்துடன் 01.01.2017ல் ரூபா 700 000 மூலதனத்துடன் தனது ஊரில் 'காமதேனு' என்ற பெயரில் பால்சாலை ஒன்றினையும் நடாத்தி வருகின்றார். இவரது வணிகத்தில் ரூபா 300 000 பெறுமதியான மோட்டார் வான் ஒன்றும், 50000பெறுமதியான பால் விநியோகம் செய்யும் உபகரணங்களும் காணப்படுகின்றன. இவரது பிரதேசத்திற்கு 'நெஸ்லே பால்' நிறுவனமானது புதிதாக தனது பால் கொள்வனவு நடவடிக்கையினை விரிவுபடுத்தியுள்ளது. இதனால் தனது தொழிலை விஸ்தரிக்கும் நோக்கில் 1.3.2017 வங்கியில் கடன் ரூ 500 000 ஐ பெற்றுள்ளார். இந் நோக்கத்துக்காக தனது வணிகத்தின் பெயரினை பதிவும் செய்துள்ளார். கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1.05.2017 | காசுக்கு பால் விற்பனை | ரூ 40 000 |
| 05.05.2017 | கடனுக்கு பால் விற்பனை | ரூ 20 000 |
| 06.05.2017 | மின்சாரக் கட்டணம் செலுத்தியது | ரூ 15 000 |
| 10.05.2017 | குளிர்சாதனப் பெட்டி பாலை பாதுகாக்கும் நோக்குடன் சிங்கர் கம்பனியில் கடனுக்கு வாங்கியது (05 வருட தவணையில்) | ரூ 75 000 |
| 15.05.2017 | உதவியாளர் சம்பளம் செலுத்தியது | ரூ 20 000 |
| 20.05.2017 | அழகர் மகனின் சுகயீனத்துக்கான மருத்துவச் செலவு | ரூ 3500 |
| 25.05.2017 | வட்டி ரூ 4000 உட்பட வங்கிக் கடன் தவணைக் கட்டணம் செலுத்தியது | ரூ 20 000 |

1. (அ) காமதேனு வணிகத்தினால் திருப்தி செய்யப்படும் மனித தேவை எது?
   (ஆ) காமதேனு வணிகத்தின் பலம் ஒன்றினை குறிப்பிடுக?
2. (அ) காமதேனு வணிகம் பதிவு செய்யப்பட வேண்டியதன் அடிப்படைக் காரணம் எது?
   (ஆ) காமதேனு வணிகம் பதிவு செய்வதன் மூலம் பெறக்கூடிய அனுகூலம் ஒன்றினைக் குறிப்பிடுக?
3. (அ) காமதேனு வணிகத்துக்கு கிடைத்துள்ள வாய்ப்பு ஒன்றினைக் குறிப்பிடுக?



kalvi.lk

(ஆ) காமதேனு வணிகத்தில் அக்கறை செலுத்தும் இரு தரப்பினரைக் குறிப்பிடுக?

4. (அ) காமதேனு வணிகம் உடமை அடிப்படையில் வகைப்படுத்தும் போது எந்த வணிக நிறுவன வகைக்கு உரித்தானது?

(ஆ) காமதேனு வணிகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டு உற்பத்திக் காரணிகளை குறிப்பிடுக?

5. காமதேனு வணிகத்தின் ஆரம்ப மூலதனம் யாது?

6. காமதேனு வணிகத்தில் காணப்படும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

7. காமதேனு வணிகத்தில் காணப்படும் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

8. 2017 மே மாதத்துக்கான மொத்த விற்பனை வருமானம் யாது?

9. சிங்கர் கம்பனியில் கடனுக்கு வாங்கிய குளிர்சாதனப் பெட்டி தொடர்பில்

(அ) பதிவு செய்ய வேண்டிய முதன்மை ஏடு எது?

(ஆ) இரட்டைப் பதிவினையும் எழுதுக?

10. 25.05.2017 அன்று இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல் கீழ்வரும் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கத்தினை பெறுமானங்களுடன் காட்டுக.

சொத்துக்கள் = பொறுப்புக்கள் + உரிமையாண்மை

.......................... = ........................ + .............................

(மொத்தம் 20 புள்ளிகள்)

Education kalvi The National e-learning Portal for The General Education

## பகுதி I

## வணிகக்கல்வி

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)**

**02.**

1. (அ) விருப்பங்கள் என்றால் என்ன?

(01 புள்ளி)

(ஆ) மனித தேவை, விருப்பங்களுக்கு இடையிலான இரண்டு வேறுபாடுகளை தருக?

(01 புள்ளி)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானவையா? பொய்யானவையா? என்பதைக் குறிப்பிடுக.

(அ) உடமையாளர்கள், முகாமையாளர், ஊழியர்கள் மற்றும் போட்டியாளர் ஆகியோர் வணிகமொன்றின் அகச் சூழல் காரணிகளாவர்

(ஆ) உணவு, உடை, கல்வி ஆகியன மட்டும் மனிதனின் அடிப்படைத் தேவைகள் ஆகும்.

(இ) உற்பத்திக் காரணிகள் நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சியாண்மை என வகைப்படுத்தப்படும்.

(ஈ) வணிகங்கள் அவற்றின் நோக்கங்களின் அடிப்படையில் பிரதானமாக பொதுத்துறை வணிகங்கள், தனியார் துறை வணிகங்கள் என வகைப்படுத்தலாம்.

(02 புள்ளிகள்)



kalvi.lk

3. திரேசா என்பவர் ஆடை வடிவமைப்பு மற்றும் ஆடை தைத்தல் பாடநெறியினைப் பூரணமாகப் பூர்த்தி செய்ததன் பின்பு தன்னுடைய கணவனின் துணையுடன் 10 தையல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்து தனது வீட்டின் ஒரு பகுதியில் ஆடை தைக்கும் வணிகத்தினை ஆரம்பித்தார்.
   (அ) திரேசாவினுடைய வணிகத்தில் அக்கறை காட்டும் இரு தரப்பினர்களை குறிப்பிடுக?
   (ஆ) குறித்த வணிகத்தில் அக்கறையுடையவர்கள் ஆர்வம் காட்டுவதற்கான காரணங்கள் ஒவ்வொன்றினைக் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

4. கயல் என்பவர் பிரபலமான பாடசாலைக்கு அருகில் பாடசாலை எழுதுகருவிகள் மற்றும் காகிதாதிகளை விற்பனை செய்யும் வணிகத்தினை நடாத்தி வருகின்றார். அண்மையில் அவருடைய வணிக நிறுவனத்திற்கு அருகில் மேலும் ஒரு புத்தகங்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கயல் வணிகத்தின்
   (அ) வாய்ப்புக்கள் மற்றும்
   (ஆ) அச்சுறுத்தல்களைக் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**03.**

1. (அ) வணிகம் என்பதனால் கருதப்படுவது யாது? (01 புள்ளி)
   (ஆ) உற்பத்திகளின் தன்மைக்கேற்ப வணிகங்களை வகைப்படுத்துக? (01 புள்ளி)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானவையா? பொய்யானவையா? என்பதைக் குறிப்பிடுக.
   (அ) இலத்திரனியல் வணிகத்தினூடாக இன்று முழு உலகுமே 'உலகக் கிராமம்' (Global Village) என்ற நிலைக்கு மாறியுள்ளன.
   (ஆ) அழகுக் கலை நிலையங்கள் ஒரு சேவை உற்பத்தி வணிகமாகும்.
   (இ) மேசன் தொழிலாளர்களும் தச்சு வேலை செய்பவர்களும் உடல் உழைப்பினை வழங்கும் தொழிலாளர்கள் ஆவர்.
   (ஈ) வணிகத்திற்கு அரசினால் வழங்கப்படும் வரிச் சலுகைகள் வணிகத்திற்கு வாய்ப்பொன்றாகும்.

(02 புள்ளிகள்)

3. நெடுங்கேணிப் பகுதியில் விவசாயத் தொழிலில் ஈடுபடுகின்ற 40 பேர் ஒன்று சேர்ந்து தாம் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் விவசாயப் பொருள்களுக்கு நியாயமான விலையைப் பெறும் நோக்கில் ஜனநாயக நிர்வாகத்துடன் கூடிய சுயாதீனமான அமைப்பொன்றினை ஆரம்பிப்பதற்கு எண்ணுகின்றனர்.
   (அ) மேற்குறிப்பிட்ட விவசாய உற்பத்தியாளர்களுக்கு நீங்கள் முன்மொழியும் வணிக அமைப்பு வகை யாது?
   (ஆ) மேலே நீங்கள் முன்மொழிந்த ஒழுங்கமைப்பு முறையின் அனுகூலமொன்றையும் பிரதிகூலமொன்றையும் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

4. அன்ரனி கடற்கரையிலிருந்து சேகரிக்கும் சிப்பிகளைக் கொண்டு உதவியாளர் ஒருவரின் துணையுடன் ஒட்டுப் பசையையும் வர்ணங்களையும் பயன்படுத்தி அழகிய சிப்பியோட்டு நிர்மாணங்களை மேற்கொண்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்கின்றார்.

(அ) இச் சம்பவத்தில் குறிப்பிடப்படும் வணிகத்தின் இரண்டு உற்பத்திக் காரணிகளை எழுதுக?

(ஆ) நீர் மேலே (iv) (அ) இல் குறிப்பிட்ட ஒவ்வோர் உற்பத்திக் காரணிகளுக்கும் இச் சம்பவத்தில் இருந்து ஒவ்வோர் உதாரணம் தருக?

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**04.**

1. (அ) வணிகத்திற்குத் தேவையான நிதிகளை ஈடுபடுத்தி அதன் இடர்களைப் பொறுப்பேற்கும் நபர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?

(01 புள்ளி)

(ஆ) உடைமையின் அடிப்படையில் வணிகங்களை இரண்டாக வகைப்படுத்துக?

(01 புள்ளி)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையானவையா? பொய்யானவையா? என்பதைக் குறிப்பிடுக.

(அ) அரசினால் மூலதனமிட்டு அரசிற்கு உடைமையாகவுள்ள வணிக அமைப்பு பொதுத்துறை வணிக அமைப்பாகும்.

(ஆ) பங்குடமை வணிக அமைப்பொன்றில் பங்காளர் உச்ச எண்ணிக்கை 20 பேர் என 2007ம் ஆண்டு 07ம் இலக்க கம்பனிச் சட்டம் குறிப்பிட்டுள்ளது.

(இ) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், இலாபம் உழைத்தல், பதிவு செய்தல் போன்றன முகாமைத்துவக் கருமங்கள் ஆகும்.

(ஈ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒரு தனியார் துறை வணிகமாகும்.

(02 புள்ளிகள்)

3. சரவணனும் காதரும் சமமாக மூலதனத்தை ஈடுபடுத்தி ஒரு பல்பொருள் வாணிபமொன்றை நடாத்த உடன்படிக்கையொன்றில் சைக்காத்திட்டுள்ளனர். இவர்கள் தமது வணிகத்திற்கு தாயகம் என்ற பெயரை பதிவு செய்ய எண்ணியுள்ளனர்.

(அ) இவர்களால் உருவாக்கக் கூடிய வணிக அமைப்பு எது?

(ஆ) இவ் வணிக அமைப்பு எச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்?

(02 புள்ளிகள்)

4. துளசி என்பவர் தனது வணிகத்தினை 'துளசி களஞ்சியம்' என்ற பெயரில் பதிய விரும்புகிறார்.

(அ) இவர் வணிகத்தை ஆரம்பித்து எத்தனை நாட்களுள் பதிவுக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்?

(ஆ) இவ் வணிகத்தில் காணப்படும் பிரதிகூலங்கள் 02 இனைக் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II கணக்கீடு

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)**

**05.**

1. (அ) கணக்கீட்டின் பிரதான நோக்கம் யாது?

   (ஆ) பொறுப்பொன்றின் பிரதான பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக?

(02 புள்ளிகள்)

2. கணபதி வணிகத்தின் 2017 ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தினுள் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

   1. 2017.01.01 இல் உரிமையாளரால் மூலதனமாக இட்ட காசு ரூ 10 000
   2. 2017.01.02 இல் பொருள் கொள்வனவு ரூ 20 000
   3. 2017.01.03 இல் உரிமையாளர் பற்றிய காசு ரூ 10 000
   4. 2017.01.04 இல் வங்கிக்கடன் பெற்றது ரூ 50 000

**வேண்டப்படுவது**

மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற முறையினைக் காட்டுக. அதற்காகப் பின்வரும் மாதிரியினைப் பயன்படுத்தவும்.

| கொடுக்கல் வாங்கல் இலக்கம் | சொத்து = | உரிமை + | பொறுப்பு |
|---|---|---|---|
| 01 | | | |
| 02 | | | |
| 03 | | | |
| 04 | | | |

(2 புள்ளிகள்)

3. **விவேகம் வணிகத்தின் 2017 யூன் மாதத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.**

| திகதி | பட்டியல் இலக்கம் | கொள்வனவாளர் | தேறிய பெறுமதி |
|---|---|---|---|
| 2017.06.02 | 86 | சங்கக்கார | 11 250 |
| 2017.06.08 | 146 | மலிங்க | 7 200 |
| 2017.06.15 | 326 | யுவராஜ் | 6 750 |

**வேண்டப்படுவது**

(அ) 2017 யூன் மாதத்திற்கான விற்பனை நாட்குறிப்பேடு

(ஆ) தேவையான பேரேட்டுக் கணக்குகள்

(04 புள்ளிகள்)



kalvi.lk

**4. காமாட்சி வணிகத்தின் 2017 மார்ச் மாதத்தில் இடம் பெற்ற சில்லறைக்காசு கொடுப்பனவுகளுக்குரிய தகவல்கள் வருமாறு.**

**சில்லறைக்காசு கட்டுநிதி ரூபா 2500 ஆக இருந்தது.**

| | (ரூபா) |
|---|---|
| • 01.03.207 இல் மீதி | 500 |
| • 01.03.2017 இல் மீதி நிரம்பல் செய்யப்பட்டது. | |
| • 01.03.2017 இல் தபால் கட்டணம் | 120 |
| • 03.03.2017 இல் உபசரணைச் செலவு | 360 |
| • 04.03.2017 இல் ஆட்டோ செலவு | 640 |
| • 07.03.2017 இல் உட்சுமை கூலி | 500 |
| • 10.03.2017 இல் சுத்திகரிப்புச் செலவு | 200 |
| • 16.03.2017 இல் மீள் நிரப்பல் செய்யப்பட்டது. | |

**வேண்டப்படுவது**

அஞ்சல் செலவு, பிரயாணச் செலவு, உபசரணைச் செலவு, நானாவிதச் செலவு, பேரேட்டுக் கணக்குகள் என்னும் பகுப்பாய்வு நிரல்களுடன் கூடிய சில்லறைக் காசேட்டைத் தயாரிக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**06.**

1. (அ) நடைமுறைச் சொத்துகளுக்கு இரண்டு உதாரணம் குறிப்பிடுக?

(01 புள்ளி)

(ஆ) வங்கி ஒன்றில் இருந்து ரூபா 50 000 வங்கிக் கடன் பெறப்பட்டது. இதற்கான இரட்டைப் பதிவினை எழுதுக?

(01 புள்ளி)

2. பின்வரும் பேரேட்டுக் கணக்குகள், சொத்து, பொறுப்பு, உரிமை, வருமானம், செலவீனம் என்பவற்றுள் எவ்வகையை சார்ந்தவை எனக் குறிப்பிடுக.

(அ) தளபாடம்

(ஆ) மூலதனம்

(இ) வங்கிக்கடன்

(ஈ) மின்கட்டணம்

(02 புள்ளிகள்)

3. (அ) 'நிகழ்காலத்தில் கணக்கீட்டுத் துறையில் பயன்படுத்தப்படும் கணக்கீட்டு மென்பொருள் பொதிகள்' இரண்டினைப் பெயரிடுக?

(ஆ) கணினி மயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் அனுகூலம் ஒன்றினையும், பிரதிகூலம் ஒன்றினையும் குறிப்பிடுக?

(04 புள்ளிகள்)

4. 01.01.2017 இல் கமலா வாணிபம் ஆரம்பிக்கப்பட்டது. 31.01.207 இல் முடிவடைந்த மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

| திகதி | பற்றுச்சீட்டு இல | விபரம் | பெறுமதி |
|---|---|---|---|
| 01.01.2017 | 51 | மூலதனமிட்டது | 120 000 |
| 02.01.2017 | 52 | வங்கிக் கடன் பெற்றது | 80 000 |
| 15.01.2017 | 53 | விற்பனை | 30 000 |
| 25.01.2017 | 54 | வாடகை வருமானம் | 20 000 |

| திகதி | கொடுப்பனவுக் கைச்சாத்து இல | விபரம் | பெறுமதி |
|---|---|---|---|
| 03.01.2017 | 65 | கொள்வனவு | 60 000 |
| 10.01.2017 | 66 | கடன் கொடுநர் | 40 000 |
| 17.01.2017 | 67 | தளபாடம் | 70 000 |
| 28.01.2017 | 69 | காப்புறுதிக் கட்டணம் | 5 000 |

**வேண்டப்படுவது**

(அ) பொருத்தமான எல்லா விடயங்களையும் உள்ளடக்கிய மாதிரியை பயன்படுத்தி 2017 ஜனவரி மாத காசுக் கணக்கு

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**07.**

1. (அ) காசோலை மூலம் கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு ஆரம்பிக்க வேண்டிய வங்கிக் கணக்கின் வகை யாது?

(01 புள்ளி)

(ஆ) கடன்படுநர் ஒருவரிடம் பெற்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 8500 காசோலை மறுக்கப்பட்டது. காசோலை மறுப்பினை பதிவதற்கான இரட்டைப் பதிவினை எழுதுக?

(01 புள்ளி)

2. பின்வரும் அட்டவணையில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.
3.

| கொடுக்கல் வாங்கல்கள் | மூல ஆவணம் | மூல ஏடு |
|---|---|---|
| (அ) காசு கொடுத்து மோட்டார் வான் வாங்கியது | .................................. | .................................. |
| (ஆ) டேவிட் கம்பனியிடம் கடனுக்கு மோட்டார் வான் வாங்கியது | .................................. | .................................. |

(02 புள்ளிகள்)



kalvi.lk

4. 31.10.2017 இல் இருந்தவாறு இம்ரான் வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி ரூ 18 000 ஆகும். ஆனால் 2017 ஒக்டோபர் மாதத்துக்கான வங்கியில் இருந்து கிடைக்கப் பெற்ற வங்கிக்கூற்று மீதியானது வங்கிக் கணக்கு மீதியுடன் இணங்கவில்லை. பின்னர் வித்தியாசத்துக்கான பின்வரும் காரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

- வங்கிக் கணக்கில் பதியப்படாத வங்கி கட்டணம் ரூ 1600
- வைப்புச் செய்த காசோலைகளில் ஒக்டோபர் மாதத்தில் தீர்வையாகாத காசோலைகள் ரூ 4000
- வழங்கப்பட்ட போதும் ஒக்கேடாபர் மாதத்தில் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ 3800 ஆகும்.

**வேண்டப்படுவது**

(அ) 31.10.2017 இல் உள்ளவாறான வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியை சீராக்குதல்.

(ஆ) 31.10.2017 இல் உள்ளவாறான வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றினை தயாரித்தல்.

(04 புள்ளிகள்)

5. 31.03.2047 இல் காவேரி வணிகத்தின் பரீட்சைமீதி சமப்படவில்லை. இதனால் அதன் வரவுப் பக்கத்தில் ரூ 9000 தொங்கல் கணக்கு மீதி இடப்பட்டு சமப்படுத்தப்பட்டது. பின்னர் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

- கட்டிட வாடகை செலுத்தியது ரூ 3000 காப்புறுதிக் கணக்கின் வரவுப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- மூலதனக் கணக்கு மீதி ரூ 35 000 பரீட்சை மீதியில் ரூ 44 000 என பதிவு செய்யப்பட்டுள்ளது.

**தயாரிக்குக.**

(அ) மேலுள்ள தவறுகளை திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவுகள்

(ஆ) மேலுள்ள தவறுகளை திருத்திய பின்னருள்ள தொங்கல் கணக்கு

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

**Whatsapp**
**075 287 1457**